மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. A.J. மணிக்கண்ணன் அவர்கள்.*

திரு. A.J. மணிக்கண்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகமெங்கும் ஒரு இலட்சம் விவசாய மின் இணைப்புகள் வழங்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்தமைக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கின்றேன்.*

இன்றையதினம் விவசாயிகளைப் பொறுத்தமட்டில் நமது அரசைத்தான் அவர்கள் முழுமையாக நம்பியிருக்கின்றார்கள். இத்திட்டத்திற்கு விவசாயிகள் மத்தியில் பெருமளவில் வரவேற்பு இருந்துகொண்டிருக்கிறது. எங்கள் பகுதியில் ஒரு துணை மின் நிலையம் கோரி விண்ணப்பம் செய்திருந்தோம். அதனையும் இந்த பட்ஜெட்டில் அறிவித்திருக்கின்றார்கள். மின்மாற்றிகள் பழுதுபட்டவுடனே அதனையும் மாற்றியிருக்கின்றார்கள். அதற்காக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்களுக்கும் மனமார்ந்த நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நன்றி சொல்லிவிட்டீர்கள்.*

வினா வரிசை எண் 44, மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. சிவகுமார், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

44—

நூலகம்

***3269—திரு. ச. சிவகுமார்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலம் தொகுதி, வல்லம் ஒன்றியம், ஈச்சூர் கிராமத்தில் நூலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுடைய அனுமதியோடு பதிலை இப்பேரவைக்கு அளிக்கின்றேன்.*

2021 செப்டம்பர் 9]

(அ) மற்றும் (ஆ) நூலகம் அமைப்பதற்காக வரையறுக்கப்பட்ட விதிகளின்படி முதலில் பகுதிநேர நூலகம் மட்டுமே அமைக்க இயலும். பொதுமக்களின் பயன்பாடு மற்றும் உறுப்பினர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் பகுதிநேர நூலகமானது, ஊர்ப்புற நூலகம், கிளை நூலகம், முழு நேர நூலகம் என தரமுயர்த்தப்படும்.

எனவே, மயிலம் தொகுதி, வல்லம் ஒன்றியம், ஈச்சூர் கிராமத்தில் பகுதி நேர நூலகம் அமைப்பதற்குத் தேவையான நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படாத நிலையில், அப்பகுதியில் தற்போது நேரடியாக நூலகம் அமைக்க வழிவகை இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. சிவகுமார் அவர்கள்.*

முற்பகல் 10–45

திரு. ச. சிவகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மயிலம் தொகுதியில், ரெட்டணையிலிருந்து செஞ்சி செல்லும் சாலையின் மையப் பகுதியாக விளங்கும், ஈச்சூரைச் சுற்றி 3 கி.மீ. தொலைவில் உள்ள கிராமங்களான மேல்சேவூரில் அரசு உயர்நிலைப் பள்ளியும், கீழ்மாம்பட்டில் அரசு உயர்நிலைப் பள்ளியும், திருவம்பட்டியில் அரசு உயர்நிலைப் பள்ளியும், அணிலாடியில் அரசு உயர்நிலைப் பள்ளியும் உள்ளன. மேற்கண்ட பள்ளிகளில் 2000–க்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர் கல்வி பயில்கின்றனர். மாணவர்களின் அறிவுத் திறனை மேம்படுத்தவும், போட்டித் தேர்வுகளுக்கு மாணவர் தங்களை தயார்படுத்திக்கொள்ளவும், நாட்டு நடப்பு விஷயங்களைத் தெரிந்துகொள்ளவும், கிராமங்களைச் சுற்றியுள்ள பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் அறிவுப் பசியைப் போக்கும் வகையிலும் விரைவில் இந்த நூலகம் அமையும் என்பதில் எந்தவித மாற்றுக் கருத்தும் இல்லை. எனவே, இந்த நூலகத்தை அமைப்பது சாலச் சிறந்தது என்பது அப்பகுதி மக்களின் வேண்டுகோளாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

ஒரு நூலகம் திறக்கப்படும்போதுதான் ஒரு சிறைச்சாலை மூடப்படுகிறது என்ற சான்றோரின் கருத்தின்படி, நூலகத்தை அமைக்க ஆவன செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

[2021 செப்டம்பர் 9

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே சொன்னது போலத்தான். முதலில் பகுதிநேர நூலகம் மட்டுமே அமைக்க இயலும். அந்நூலகத்திற்குப் படிக்க வரும் வாசகர்களின் வருகை, உறுப்பினர் சேர்க்கை, புரவலர் சேர்க்கை மற்றும் நூல் இரவல் ஆகியவற்றின் அடிப்படையில், அதிக பயன்பாடுடைய பகுதிநேர நூலகங்கள், ஊர்ப்புற நூலகங்களாகவும், அதன் பின்னர் மேற்படி ஊர்ப்புற நூலகங்கள், அவற்றின் பயன்பாட்டின் அடிப்படையில், கிளை நூலகங்களாகவும் தரமுயர்த்த ஆணை வழங்கப்பட்டு, கிளை நூலகங்களாகச் செயல்படுகின்றன. இக்கிளை நூலகங்களை மேலும் தரமுயர்த்தி முழு நேர நூலகங்களாக செயல்படுத்தப்படுவதற்கான அந்த சாத்தியக்கூறு இருக்கும்பட்சத்தில், அக்கோரிக்கை கண்டிப்பாக செய்து தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. சிவகுமார் அவர்கள்.

திரு. ச. சிவகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மயிலம் சட்டமன்றத் தொகுதி என்பது, நகராட்சியோ, பேரூராட்சியோ இல்லாமல், அனைத்துக் கிராமங்களையும் உள்ளடக்கியதாக இருக்கிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கருத்து வரவேற்கப்படுகிறது. ஏனெனில், இந்த அனைத்துக் கருத்துகளும் மாண்புமிகு மாவட்ட அமைச்சர் அவர்களுக்கும் தெரியும் என்று தெரிவித்து, என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோன்று,. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நன்றி சொன்னதுடன் போதுமே.

திரு. ச. சிவகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு நிமிடம், என் தொகுதி சார்ந்த கோரிக்கை. கடலூர் மாவட்டம் சுதந்திரப் போராட்ட வீராங்கனை அஞ்சலை அம்மாள் அவர்களுக்கு நினைவு மண்டபம் அமைக்கப்படும் என்று அறிவித்த, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், இது நூலகம் குறித்தது.

2021 செப்டம்பர் 9]

திரு. ச. சிவகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்களுக்கும் என் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

அதேபோன்று, 1987 ஆம் ஆண்டு, சமூக நீதிப் போராட்டங்களில் உயிர் நீத்த 21 தியாகிகளுக்கு நினைவு மண்டபம் அமைக்கப்படும் என்றும், அவர்களின் குடும்பத்தில் ஒருவருக்கு வேலைவாய்ப்பு வழங்கப்படும் என்றும் அறிவித்த, மாண்புமிகு தமிழக முதல்வர் அண்ணன் அவர்களுக்கும், மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்களுக்கும் என் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று, தி.மு.க-வின் மூத்த தலைவர்களில் ஒருவரும், முன்னாள் அமைச்சருமான திரு. ஏ. கோவிந்தசாமி அவர்களுக்கு அரங்கம் மற்றும் திருவுருவச் சிலை அமைக்கப்படும் என்று அறிவித்து, அதற்கு ரூ.2 கோடியே 60 இலட்சம் ஒதுக்கித் தந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்து, விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 45, மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. இராசேந்திரன், மாண்புமிகு சுற்றுச்சூழல்–காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

45—

இறகு பந்து ஆடுகளம்

***1766—திரு. சபா. இராசேந்திரன்:**

மாண்புமிகு சுற்றுச்சூழல்–காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நெய்வேலி தொகுதி, வடக்குத்து ஊராட்சி நகர்ப் பகுதியில் இறகு பந்து ஆடுகளம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. சிவ.வீ. மெய்யநாதன், சுற்றுச்சூழல்–காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

நெய்வேலி தொகுதி, வடக்குத்து ஊராட்சி, நகர்ப் பகுதியில் இறகு பந்து ஆடுகளம் அமைக்கும் திட்டம் அரசின்